பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–6, அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர் : மரு.A. சண்முககனி, எம்பிபிஎஸ்., டிசிஎச்.,**

ந.க.எண்.31573/நிபி8/1/2023

நாள்: 13.10.2023

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.மு.பிரபாகரன், இளநிலை உதவியாளர், அரசு தலைமை மருத்துவமனை, காரைக்குடி, சிவகங்கை (த/பெ.(லேட்) திரு.ப.முனியசாமி, மருத்துவமனைப் பணியாளர், அரசு தலைமை மருத்துவமனை, சிவகங்கை மாவட்டம்) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2) அரசு கடித எண்.8014/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 20.05.2021.
3) இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 67735/நிபி8/1/2019, நாள் 13.09.2021.
4) இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண். 54044/நி2/2/2021, நாள் 13.09.2021.
5) சிவகங்கை நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலக கடித ந.க.எண். 1114/நிபி2/2023, நாள் 21.05.2023.
6) அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, நாள் 08.03.2023 மற்றும் இதர தொடர்புடைய ஆணைகள்.

------

**ஆணை :**

சிவகங்கை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவமனை பணியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும்போதே 15.10.2007 அன்று இயற்கையெய்திய திரு.ப.முனியசாமி என்பவர் 10.09.1988 பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 09.09.1989 பிற்பகல் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 09.04.1960 அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 30.04.2020 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.மு.பிரபாகரன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.